**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No.62/2025**

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **ஹரிஹரன்** | தொழில் | : சமையல் மாஸ்டர் |
| தகப்பனார் பெயர் | : ராமமூர்த்தி | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 26/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 06.07.2026 |

**( எதிரிகள் A1, A2, A3, A4 ஆஜரில் உள்ளனர்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் பண்ணைக்காட்டில் வசித்து சமையல் மாஸ்டராக வேலை செய்து வருகிறேன் . எனக்கும், எனது மனைவிக்கும் சிறு வாக்குவாதம் நடைபெற்றது. பிறகு நான் 27.06.2025 ம் தேதி தவறி கீழே விழுந்துவிட்டேன் . நான் பெரியகுளம் மருத்துவமனைக்கு சென்றபோது அங்கு வந்த போலீசார் என்னிடம் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் வாங்கினார்கள். வேறு விபரங்கள் எனக்குத் தெரியாது . போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**<u>அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்ற அனுமதியுடன் மேற்கண்ட சாட்சி அரசுத் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

கடந்த 27.06.2025ம் தேதி இரவு 10.30 மணியளவில் எனது மனைவி கன்னிகா பரமேஷ்வரி , மாமனார் செந்தில்குமார் , மாமியார் கவிதா என்கின்ற அழகேஸ்வரி , மைத்துனர் அருண்கார்த்திக் என் வீட்டின் முன்பு வந்து என்னிடம் பிரச்சனை செய்தார்கள் என்றாலும் , அப்போது எதிரி என்னை ஆபாசமாக பேசி என்னை பிடித்து கீழே தள்ளி எதிரி அருண்கார்த்திக் மறைத்து வைத்திருந்த இரும்பு கம்பியைக்கொண்டு என் தலையில் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றாலும், இரண்டாம் எதிரி காப்பிக்கட்டையைக் கொண்டு என்னை தாக்கி தலையில் அடித்தார் என்றாலும் , இதைப்பார்த்த, என்னை தடுக்க வந்த எனது அப்பா ராமமூர்த்தி , அம்மா சாந்தியையும் எதிரிகள் அடித்து கீழே தள்ளிவிட்டார்கள் என்றாலும், பிறகு சம்பவத்தை பார்த்த சதீஸ் என்பவர் சண்டையை விலக்கி விட்டார் என்றால் சரியல்ல . எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் அவர்களுடன் சமாதானமாக சென்று சமாதான மனு தாக்கல் செய்திருப்பதால் எதிரிக்கு ஆதரவாக, வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.06 17:11:01 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No.62/2025**

**வழக்கு சாட்சி PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **ராமமூர்த்தி** | தொழில் | : டெய்லர் |
| தகப்பனார் பெயர் | : பழனிவேல் | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 54/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 06.07.2026 |

**( எதிரிகள் A1, A2, A3, A4 ஆஜரில் உள்ளனர்)**

<u>முதல் விசாரணை :</u>

நான் பண்ணைக்காட்டில் வசித்து டெய்லராக வேலை செய்து வருகிறேன் . எதிரிகள் எனது சம்பந்தி குடும்பத்தார் ஆவார்கள். வழக்கு குறித்து எனக்கு எந்த விபரமும் தெரியாது . போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**<u>அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்ற அனுமதியுடன் மேற்கண்ட சாட்சி அரசுத் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

கடந்த 27.06.2025ம் தேதி இரவு 10.30 மணியளவில் அ.சா.1 ன் மனைவி கன்னிகா பரமேஷ்வரி, அவரது தந்தை செந்தில்குமார், தாயார் கவிதா என்கின்ற அழகேஸ்வரி, தம்பி அருண்கார்த்திக் என் வீட்டின் முன்பு வந்து அ .சா.1– இடம் பிரச்சனை

செய்தார்கள் என்றாலும், அப்போது எதிரி அ.சா.1 ஐ ஆபாசமாக பேசி பிடித்து கீழே தள்ளி எதிரி அருண்கார்த்திக் மறைத்து வைத்திருந்த இரும்பு கம்பியைக்கொண்டு அ.சா.1ன் தலையில் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றாலும், இரண்டாம் எதிரி காப்பிக்கட்டையைக் கொண்டு அ.சா.1 ஐ தாக்கி தலையில் அடித்தார் என்றாலும், இதைப்பார்த்த, நானும், எனது மனைவியும் தடுக்க சென்றபோது எதிரிகள் அடித்து கீழே தள்ளிவிட்டார்கள் என்றாலும், பிறகு சம்பவத்தை பார்த்த சதீஸ் என்பவர் சண்டையை விலக்கி விட்டார் என்றால் சரியல்ல . எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் அவர்களுடன் சமாதானமாக செல்வதால் எதிரிக்கு ஆதரவாக , வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.06 17:11:07 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No.62/2025**

**வழக்கு சாட்சி PW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **சாந்தி** | தொழில் | : காட்டுவேலை |
| தகப்பனார் பெயர் | : ––––– | கணவர் பெயர் | : ராமமூர்த்தி |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 45/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 06.07.2026 |

**( எதிரிகள் A1, A2, A3, A4 ஆஜரில் உள்ளனர்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் பண்ணைக்காட்டில் வசித்து காட்டுவேலை செய்து வருகிறேன். எதிரிகள் எனது சம்பந்தி குடும்பத்தார் ஆவார்கள் . வழக்கு குறித்து எனக்கு எந்த விபரமும் தெரியாது . போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**<u>அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்ற அனுமதியுடன் மேற்கண்ட சாட்சி அரசுத் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

கடந்த 27.06.2025ம் தேதி இரவு 10.30 மணியளவில் அ.சா.1– ன் மனைவி கன்னிகா பரமேஷ்வரி , அவரது தந்தை செந்தில்குமார், தாயார் கவிதா என்கின்ற அழகேஸ்வரி , தம்பி அருண்கார்த்திக் என் வீட்டின் முன்பு வந்து அ .சா.1– இடம்

பிரச்சனை செய்தார்கள் என்றாலும் , அப்போது எதிரி அ .சா.1 ஐ ஆபாசமாக பேசி பிடித்து கீழே தள்ளி எதிரி அருண்கார்த்திக் மறைத்து வைத்திருந்த இரும்பு கம்பியைக்கொண்டு அ .சா.1 ன் தலையில் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றாலும் , இரண்டாம் எதிரி காப்பிக்கட்டையைக் கொண்டு அ.சா.1 ஐ தாக்கி தலையில் அடித்தார் என்றாலும் , இதைப்பார்த்த, நானும், எனது கணவரும் தடுக்க சென்றபோது எதிரிகள் அடித்து கீழே தள்ளிவிட்டார்கள் என்றாலும், பிறகு சம்பவத்தை பார்த்த சதீஸ் என்பவர் சண்டையை விலக்கி விட்டார் என்றால் சரியல்ல . எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் அவர்களுடன் சமாதானமாக செல்வதால் எதிரிக்கு ஆதரவாக , வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.06 17:11:14 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.